## <u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

நாள் 28.04.2026

அசல் வழக்கு எண். 70/2024

வா.சா.2. – சரத்குமார் , த/பெ. சுகுமார்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>குறுக்கு விசாரணை</u>**

வாக்குமூலம் நீங்கள் படித்துப் பார்த்து கையொப்பம் போட்டீர்கள் என்றால் சரிதான். வாக்கு மூலத்தில் நீங்கள் முதல் வாதி என்பவரது மகன் என்று சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். ஆனால் நீங்கள் இரண்டாம் ஆதி சுகுமார் அவர்களின் மகன் என்றால் சரிதான். வழக்கில் நீங்கள் எப்படி சம்பந்தப்பட்டீர்கள் என்றால் சுகுமாரின் இரண்டாவது மகன் என்பதால் சம்பந்தப்பட்டுள்ளேன். எதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் தெரியும். தொடர்ந்து அத்துமீறல்கள் செய்வதால் வழக்கு தாக்கல் செய்து உள்ளோம். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும் சர்வே நம்பர் 138/2, சாட்சியானவர் கையில் எழுதி வைத்து அதனை பார்த்து படித்து சொல்கிறார் என்று வழக்கறிஞர் தெரிவித்தார் அது பதிவு செய்யப்பட்டது. சர்வே எண் 138/2 சொத்து பொதுவாக இருந்தது என்றால் தெரியாது. மேற்படி சொத்து பிரிக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் எங்களுடைய சொத்து பிரிக்கப்பட்டது பற்றி தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் சர்வே நம்பர் 138/2 மற்றும் 625/3 ஆகிய இரண்டு சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஒன்று பழைய சர்வே எண் மற்றொன்று புதிய சர்வே எண் ஆகும். சர்வே எண் 625/3 பிரதிவாதிக்கு சொந்தமான சொத்து என்றால் சரியில்லை. அந்த சொத்து கடந்த 2003 ஆம் ஆண்டு எழுதப்பட்ட ஆவணத்தின்படி எங்களுக்கு பாத்தியப்பட்டது ஆகும். உங்களுடைய பட்டா எண் 790 தாக்கல் செய்து

உள்ளீர்கள் என்றால் சரிதான். அதில் என்ன சர்வே நம்பர் குறிப்பிடப்பட்டுள்ளது தெரியுமா என்றால் 138/2 என்று குறிப்பிடப்பட்டுள்ளது புதிய சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. பட்டா எண் 790 இல் சர்வே எண் 625/3 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. மேற்படி சர்வே எண்ணுக்கு தனியாக பட்டா தாக்கல் செய்தீர்களா என்றால் 790 பட்டா மட்டும் தாக்கல் செய்துள்ளேன். பட்டா எண் 790 இல் சர்வே எண் 625/5 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram.